## ஒன்றான வானமாமலை ராமாநுஜ ஜீயர் (பொன்னடிக்கால் ஜீயர்)
## வாழி திருநாமம்

திருவிருந்த மலர்த் தாள்கள் வாழியே
சிறந்த செந்துவராடையும் வாழியே
தருவிருந்தகை முக்கோலும் வாழியே
தடம் புயத்தினில் சங்காழி வாழியே
மருவு கொண்டல் மணவாள யோகியை
வாழ்த்தி வாய்ந்தருள் வாய் மலர் வாழியே
கருணை மேவு இராமாநுச முனி
கனக மௌலி கலந்தூழி வாழியே

அடியவர் தம் துயர் அனைத்தும் அறுத்தருள்வோன் வாழியே
அணி பொழில் சீவரமங்கை அவதரித்தோன் வாழியே
கடி பொழில் சூழ் பூதூர் மன் கழல் பணிந்தோன் வாழியே
கருத்தை அடர் புலன்கள் ஐந்தும் கடிந்து விட்டோன் வாழியே
வடமொழி தென்மொழி மறைகள் வகுத்துரைப்போன் வாழியே
மணவாள மாமுனியை வாழ்த்துமவன் வாழியே
இடருத்தி முழுகும் எனை எடுத்தளிப்போன் வாழியே
என் அப்பன் இராமாநுச முனிவன் வாழியே

பணவாளரவில் துயில் அரங்கேசர் பதம் பணியும்
மணவாள மாமுனி மாமலர்த் தாள்களை வாழ்த்தும் நல்ல
குணவாளன் எந்தை இராமாநுச முனி கோதில் பதம்
தணவா நிதி நமக்கு என்றென்றும் நாடோறும் சாற்று நெஞ்சே

---